பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

10 09 2026 THURSDAY  7 15 AM

ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டில் 3 ரயில்வே திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பதன் மூலம் கிழக்கு மற்றும் மத்திய பகுதி மாநிலங்களில் போக்குவரத்து இணைப்பு மேம்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பெரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள நேபாளத்திற்கு 35 டன் நிவாரணம் மற்றும் மீட்பு பொருட்களுடன் சென்ற விமானப்படையின் 8-வது விமானம் காத்மாண்டு சென்றடைந்தது.

3. இந்தியா-தாய்லாந்து இடையேயான பொருளாதார ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து புதுதில்லியில் விவாதிக்கப்பட்டது.

4. தாய்லாந்திற்கு வரும் இந்தியச் சுற்றுலா பயணிகள் விசா இன்றி 30 நாட்கள் தங்குவதற்கு அனுமதி அளிக்கப்படுவதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

5. ஜோர்டானில் நடைபெற்று வரும் ஆசிய கேடட் மற்றும் ஜூனியர் கராத்தே சாம்பியன் போட்டியில் இந்தியா 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

-------------

நாட்டில் 10 ஆயிரத்து 500 கோடிக்கும் மேலான மதிப்பில் 3 பல்தட ரயில்வே திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பதன் மூலம் சத்திஸ்கர், ஜார்க்கண்ட், மத்தியப்பிரதேசம், ஒடிசா, மேற்குவங்க மாநிலங்களில் போக்குவரத்து இணைப்பு மேம்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இம்முடிவு அம்மாநிலங்களின் பாரம்பரியம் மற்றும் வனவிலங்குகள் தொடர்பான சுற்றுலாவை ஊக்குவிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் சரக்கு போக்குவரத்து செலவுகள் குறையும் என்றும் திரு.நரேந்திர மோடி கூறியுள்ளார்.

-------------

பெரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள நேபாளத்திற்கு 35 டன் நிவாரணம் மற்றும் மீட்பு பொருட்களுடன் சென்ற விமானப்படையின் 8-வது விமானம் காத்மாண்டு சென்றடைந்தது.

இதுகுறித்து வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக வலைதளத்தில் பதிவில், தேசியப் பேரிடர் மீட்புப்படை உபகரணம், தடய

அறிவியல் பரிசோதனை உபகரணங்கள், ராணுவத்தினருக்கான பொருட்கள் உள்ளிட்டவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நேபாளத்தில் இந்தியா தொடர்ந்து நிவாரணம் மற்றும் மீட்பு பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் இந்தியாவின் சார்பில் நேபாளத்திற்கு இதுவரை 130 டன்னுக்கு மேலான நிவாரணப்பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளது.

தேடுதல், மீட்பு மற்றும் தடயவியல் பணிகளில் ஈடுபடுவதற்காக 54 பேர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

-------------

இந்தியா-தாய்லாந்து இடையேயான பொருளாதார ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து, மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயலும், தாய்லாந்து வர்த்தகத்துறை அமைச்சர் திரு. Suphajee Suthumpun-ம் விவாதித்தனர்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது, இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டை மேம்படுத்துதல், வர்த்தக வாய்ப்புகளை விரிவுபடுத்துதல், இருநாடுகளுக்கிடையேயான வர்த்தக உறவுகளை வலுப்படுத்துதல் தொடர்பாக இருநாட்டு அமைச்சர்களும் ஆலோசித்தனர்.

-------------

வேளாண்மை, வனம் தொடர்பான ஆசியான் - இந்தியா இடையே அமைச்சர்கள் நிலையிலான கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது.

இதில், மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு.சிவ்ராஜ் சிங் சௌகானும், பிலிப்பைன்ஸ் வேளாண்துறை அமைச்சர் திரு. Francisco P. Tiu Laurel-ம் இணைந்து தலைமை தாங்கினார்கள்.

அப்போது, பருவநிலை மாற்றங்களை எதிர்கொள்ள கூடிய வேளாண்மை, செயற்கை நுண்ணறிவு சார்ந்த வேளாண்மை, மண்வளம், நீர் உற்பத்தி, உணவு பாதுகாப்பு, அறுவடைக்கு பிந்தைய வேளாண்மை, வேளாண் காடுகள் ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் வேளாண்துறை அமைச்சர்கள் ஒப்புக்கொண்டனர்.

-------------

தாய்லாந்திற்கு வரும் இந்தியச் சுற்றுலா பயணிகள் விசா இன்றி 30 நாட்கள் தங்குவதற்கு அனுமதி அளிக்கப்படுவதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இது இம்மாதம் 15 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தாய்லாந்தில் உள்ள இந்தியத்தூதரகம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், தாய்லாந்திற்கு வருகை தந்த நாள் முதல் 6 மாதத்திற்கு செல்லுபடி ஆகக்கூடிய பாஸ்போர்டை பயணிகள் வைத்திருக்க வேண்டும் என்று கூறியுள்ளது.

அதே போன்று திரும்ப செல்வதற்கான பயணச்சீட்டுகள், தங்கும் விடுதிகளுக்கான முன்பதிவு, தெளிவான பயணத்திட்டங்கள் ஆகியவை வைத்திருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளது.

தாய்லாந்திற்கு வருகை தருவதற்கு 72 மணி நேரத்திற்கு முன்பாக அதிகாரப்பூர்வ குடியேற்ற இணையதளம் வாயிலாக தாய்லாந்து டிஜிட்டல் வருகை அட்டையை பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் இந்தியத்தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

-------------

இந்தியாவுக்கான ஆஸ்திரேலிய தூதர் திரு. Philip Green தலைமையிலான குழுவினர், ஹரியானா முதலமைச்சர் திரு. நயாப் சிங் சயினியுடன் பல்வேறு துறைகளின் ஒத்துழைப்பு குறித்து விவாதித்தனர்.

சண்டிகரில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது, கல்வி, உயர்கல்வி, திறன் மேம்பாடு, புதுமை கண்டுபிடிப்பு, வேளாண்மை, பசுமை எரிசக்தி, விளையாட்டு சுற்றுலா, முதலீடு, இளைஞர்களுக்கான உலகளாவிய வாய்ப்புகளை உருவாக்குதல் உள்ளிட்ட துறைகளில் ஹரியானா – ஆஸ்திரேலியா ஒத்துழைப்பை மேம்படுத்துவதை குறித்து விவாதித்தனர்.

ஹரியானா மற்றும் ஆஸ்திரேலியாவில் உள்ள முன்னணி பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும் விவாதித்தனர்.

-------------

ஈரான் நாட்டின் முன் ஒப்புதல் இன்றி பிராந்திய கடற்பகுதியில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு மண்டலத்திற்குள் நுழையும் கப்பல்கள் மீது தடை விதிக்கப்படும் என்று ஈரான் எச்சரித்துள்ளது.

ஒப்புதல் இன்றி கப்பல்கள் அப்பகுதிக்குள் நுழைந்தால் பின்னர் அவை ஹோர்முஸ் நீரிணை பயன்படுத்த தடை விதிக்கப்படும் என்றும் கூறியுள்ளது.

அத்துடன் துறைமுகம், காப்பீடு மற்றும் இதர சேவைகள் மறுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

-------------

விநாயகர் சதுர்த்தியையொட்டி பயணிகளின் நெரிசலை தவிர்க்கும் வகையில், 2 சிறப்பு ரயில்களை தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

அதன்படி, சென்னை சென்ட்ரலில் இருந்து போத்தனூருக்கு நாளை இரவு மணி 11.50-க்கு சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

மற்றொரு ரயில் தாம்பரத்திலிருந்து தென்காசிக்கு நாளை இரவு மணி 7.30-க்கு இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே கூறியுள்ளது.

இதற்கான முன்பதிவு இன்று காலை 8 மணிக்கு தொடங்குவதாக தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

-------------

சென்னை பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமை செயலகம் கட்டும் திட்டத்தை மாநில அரசு கைவிட வேண்டும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், நெரிசல் மிகுந்த பட்டினப்பாக்கத்தில், தலைமை செயலகம் கட்டப்பட்டால், போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு சார்ந்த பல்வேறு பிரச்சனைகள் உருவாக வாய்ப்பிருப்பதாக கூறியுள்ளார்.

அத்துடன் கடற்கரையை ஒட்டிய பகுதி என்பதால், பெரிய கட்டிடம் கட்டப்படும்போது ஏற்படும் சுற்றுச்சூழல் பிரச்சனையையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், அப்பகுதி மீனவ சமூகத்தினரின் வாழ்விடத்தையும், வாழ்வாதாரத்தையும் ஒட்டுமொத்தமாக சீர்குலைத்துவிடும் என்று கூறியுள்ளார்.

இதுபோன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படும்போது, அவசரகதியில் செயல்படாமல் பல்வேறு தரப்பினருடன் ஆலோசனை மேற்கொண்டு ஆய்வுக்கு பிறகு அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே, சென்னை பட்டினப்பாக்கத்தில் தலைமை செயலகம் அமைக்கும் திட்டத்தை கைவிட்டு மாற்று இடத்தை தேர்வு செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் திரு. விஜய்யை தான் வலியுறுத்துவதாக டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

-------------

கேரளாவில் கடந்த 3 நாட்களாக வெப்பம் நிலவிய நிலையில், ஆலப்புழா, எர்ணாகுளம் மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யப்படும் என்று வானிலை ஆய்வ மையம் தெரிவித்துள்ளது.

அம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் வெப்பநிலை நேற்று இயல்பைவிட 3 முதல் 4 டிகிரி செல்ஸியஸ் அதிகமாக இருந்தது.

இதற்கிடையே, திருவனந்தபுரம் மாவட்டத்தின் கடலோர பகுதிகளில் இன்று முதல் நாளை காலை வரை கடலில் அலை உயரக்கூடும் என்றும் கடல் அரிப்பு ஏற்படும் என்றும் தேசிய பெருங்கடல் தகவல் சேவை மையம் தெரிவித்துள்ளது.

-------------

ஆசிய கேடட் மற்றும் ஜூனியர் கராத்தே சாம்பியன் போட்டியில் இந்தியா 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது. ஜோர்டானின் அம்மானில் நடைபெற்று வரும் போட்டியில் மகளிர் கேடட் பிரிவில் ஆனந்தி கார்க்கும், ஜூனியர் பிரிவில் சத்திய தேஜாவும் வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.

--------

வியட்நாம் ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் கிரண் ஜார்ஜ், ஹெச்எஸ் பிரணாய், தருண் மணப்பள்ளி ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், கிரண் ஜார்ஜ், தாய்லாந்தின் Wongsup-யும் ஹெச்எஸ் பிரணாய், மலேசியாவின் Jing Hong Kok-யையும் வென்றனர்.

இரண்டாவது சுற்றில் தருண் மணப்பள்ளி தைவானின் Yu Kai Wang-யை வென்றார்.

--------

அமெரிக்க ஓபன் ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மாயா ராஜேஸ்வரன் ரேவதி – யுக்ரைனின் Antonia Sushkova இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை 2-6, 6-2, 10-7 என்ற செட் கணக்கில் செக் குடியரசின் Kovackova – Zajickova இணையை வென்றது.

--------

ஆசியக் கோப்பை மகளிர் டுவென்டி டுவென்டி கிரிக்கெட் போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

துபாயில் நடைபெற உள்ள இப்போட்டி, இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

--------

ஆசியக் கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியின் மகளிர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில், இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது. சீனாவில் இப்போட்டி நடைபெற உள்ளது.

<<<<>>>>